Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 11, 2025

புதன்கிழமை 11, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 258 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## கம்பளை குடும்பம் இந்தியாவில் தஞ்சம்

பாறுக் ஷிஹான்

கண்டி மாவட்டம், கம்பளையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் அகதிகளாகத் தனுஷ்கோடிக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர்களை மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## IMF துணை நிர்வாக இயக்குநர் வருகிறார்

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முதலாவது துணை நிர்வாக இயக்குநர் (FDMD) கலாநிதி கீதா கோபிநாத், 2025 ஜூன் 15 முதல் 16 வரை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

தொடர்ச்சி P2



### சட்டவிரோதமாக

# "சில கைதிகள் விடுவிப்பு"

### ஒப்புக்கொள்கிறார் ஜனாதிபதி; நெறிமுறை சார் திட்டம் வேண்டுமாம்

பாதாள உலகத் தலைவர்களுக்கு விமானப் பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறைச்சாலைகள் திணைக்களத்தில் உள்ள சிலர் சட்டவிரோதமாகக் கைதிகளை விடுவித்துள்ளனர். போக்குவரத்துத் திணைக்களத்தில் உள்ள சில அதிகாரிகள் சட்டவிரோத செயல்களைச் செய்துள்ளனர். இந்த நிறுவனங்கள் குறித்து பிரஜைகள் மகிழ்ச்சியான மனநிலையில் இல்லை. எனவே, பிரஜைகளின் பிரஜைப் பொறுப்பை உருவாக்க நெறிமுறை சார் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்கான வழிகாட்டுதலை இந்த பௌத்த தத்துவத்தின் மூலம் பெறலாம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க மிஹிந்தலை விகாரையில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற தேசிய பொசொன் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்த கருத்துக்களைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ரணில்–தமுகூ சந்திப்பு

ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை குழுவினருக்கும் இடையில் சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை (10) அன்று இடம்பெற்றுள்ளது.

ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின் பெயரில் அவரது ஃப்ளவர் வீதி அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

### 4 மாணவிகளை

## AI மூலம் நிர்வாணப்படுத்திய இரு மாணவர்கள் கைது

AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நான்கு பாடசாலை மாணவிகளின் முகத்தில் நிர்வாண உடல்களை ஒட்டவைத்து, அவற்றை பாடசாலையின் சமூக ஊடக தளங்களில் பரப்பியதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்களை இந்த மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஹொரணை நீதவான் சந்தன கலன்சூரிய உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



## "முழுப் பட்டியல் வேண்டும்"

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட நபர்களின் பட்டியலை பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நல்லூருக்கு அருகில் LGBTQ நடைபவனி

### கீதநாத் காட்டம்: மத விழுமியங்களுக்கு எதிரானது என்கிறார்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் மாற்று பாலினத்தவர்கள் LGBTQ முன்னெடுத்த பேரணியை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் கடுமையாக கண்டித்துள்ளார்.

மாற்று பாலினத்தவர்களின் உரிமைகளை ஊக்குவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடைபவனி, தமிழ் கலாச்சாரம் மற்றும் மத விழுமியங்களுக்கு எதிரானது என்றும் கண்டித்துள்ளார்.

தொடர்ச்சி P2






## றில்வின் சில்வா சீனாவுக்கு விஜயம்

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் றில்வின் சில்வாவிற்கும், சீனாவின் ஜெஜியாங் மாகாண ஆளுநர் லியு ஜீக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## தையிட்டிக்கு வந்தவர் கஞ்சாவுடன் கைது

யாழ். தையிட்டி விகாரைக்கு தென்னிலங்கையில் இருந்து வழிபட வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் கஞ்சாவுடன் திங்கட்கிழமை (09) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

தையிட்டி விகாரைக்கு வழிபட வந்த நபர் அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார் அவரை விசாரணைக்குட்படுத்திய நிலையில், அவரிடமிருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## உப்புல்தெனியவுக்கு விளக்கமறியல்

குற்றப் புலனாய்வுத் துறையின் காவலிலுள்ள, இடைநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், துஷார உப்புல்தெனிய, அளுத்கடை எண் 01 நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (10) ஆஜர்படுத்தப்பட்டார்.



தொடர்ச்சி P2

### போராட்டத்தை கட்டுப்படுத்த

## கடற்படை வீரர்களை களமிறக்கிய ட்ரம்ப்

சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்கு எதிரான கலவரத்தை ஒடுக்கும் பணியில் காவல்துறை, நேஷனல் கார்ட் படை வீரர்களுடன் தற்போது யு.எஸ். மரைன்ஸ் என்ற பாதுகாப்புப் படைப் பிரிவினைச் சேர்ந்த 700 வீரர்கள் லொஸ் எஞ்சல்ஸ் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். ட்ரம்ப் அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து லொஸ் ஏஞ்சலஸ் மற்றும் சான்பிரான்சிஸ்கோவில் பெரும் கலவரம் வெடித்துள்ளது.

தொடர்ச்சி P2



### ஜனாதிபதி மன்னிப்புக்கு தகுதியற்ற

## 26 கைதிகள் விடுவிப்பு

கடந்த ஆண்டு மற்றும் கிறிஸ்மஸ் தினத்தன்று நாடு முழுவதும் உள்ள சிறைகளில் இருந்து ஜனாதிபதி மன்னிப்புக்குத் தகுதியற்ற 26 கைதிகள் விடுவிக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

# IMF துணை நிர்வாக இயக்குநர் வருகிறார்

இந்த வருகை முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில், 2005ஆம் ஆண்டுக்குப் பிறகு IMF இன் சேவையில் உள்ள FDMD ஒருவர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல் முறையாகும்.

இந்த விஜயத்தின் போது, நிதி அமைச்சகம், இலங்கை மத்திய வங்கி மற்றும் IMF இணைந்து நடத்தும் 'இலங்கையின் மீட்புக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை' என்ற மாநாட்டில் கலாநிதி கோபிநாத் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார், இந்த மாநாடு ஜூன் 16 அன்று நடைபெறவுள்ளது.

# "முழுப் பட்டியல் வேண்டும்"

வெளிப்படைத்தன்மைக்கு உறுதியளித்த ஜனாதிபதி, முழுப் பட்டியலையும் பாராளுமன்றத்தில் வெளியிட்டு செயல்முறையைத் தணிக்கை செய்ய வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச தனது 'X' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"388 வெசாக் மன்னிப்புகள் இரத்து செய்யப்பட்டன; ஆனால், பட்டியலில் இல்லாத ஒரு மோசடி செய்பவர் வெளியேற்றப்பட்டுள்ளார். இதில் வெளிப்படைத்தன்மையை உறுதியளித்த ஜனாதிபதி, உத்தரவில் கையெழுத்திட்டார், எனவே வெளிப்படைத்தன்மை மற்றும் அமைப்பு மாற்றத்தின் நலனுக்காக, முழு பட்டியலையும் பாராளுமன்றத்தில் வெளியிட்டு செயல்முறையைக் கண்காணிப்பை உறுதி செய்ய வேண்டும்" என்று சஜித் பிரேமதாச கூறினார்.

2025 வெசாக் தின ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து தண்டனை பெற்ற வங்கியாளர் டபிள்யூ.எம். அதுல திலகரத்ன விடுவிக்கப்பட்டது அங்கீகரிக்கப்படாதது என்று கண்டறியப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் வந்துள்ளன.

ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட்ட 388 கைதிகளின் அதிகாரப்பூர்வ பட்டியலில் திலகரத்னவின் பெயர் இல்லை என்றும், நீதிமன்ற ஆவணங்களால் அது ஆதரிக்கப்படவில்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்திருந்தார்.

இந்த அங்கீகரிக்கப்படாத விடுதலை, இது, அனுராதபுரம் சிறைச்சாலையின் துணை ஆணையரைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்ய வழிவகுத்தது. அவர் இன்னும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், திங்கட்கிழமை (09) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, சிறைச்சாலைத் ஆணையாளர் நாயகத்தை கட்டாய விடுப்பில் அனுப்பவும், முதற்கட்ட விசாரணையைத் தொடங்கவும், கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதன் விளைவாக, சிறைச்சாலை ஆணையர் ஜெனரல் துஷார உப்புல்தெனிய கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டு, பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், புதன்கிழமை (11) வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# தையிட்டிக்கு வந்தவர் கஞ்சாவுடன் கைது

குறித்த நபரை பலாலி பொலிஸார் கைது செய்ததுடன், நீதிமன்றில் நிறுத்தப்படவுள்ளார்.

# நல்லூருக்கு அருகில் LGBTQ நடைபவனி

தனிநபர்கள் உரிமைகளைப் பெறலாம் என்றாலும், அவர்கள் தமிழ் சமூகத்தின் மரபுகள் மற்றும் நம்பிக்கைகளையும் குறிப்பாக புனித இடங்களில் மதிக்க வேண்டும் என்று அவர் ஓர் அறிக்கையில் வலியுறுத்தினார்.

"யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும், உலகளாவிய பக்தர்களுக்கும் புனிதமான இடமான யாழ்ப்பாணத்தில் உள்ள புனித நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்னால், ஓரினச்சேர்க்கை உரிமைகளை ஊக்குவித்து, தங்கள் நம்பிக்கைகள் என்று அழைக்கப்படுவதை திணிக்கும் ஒரு குழுவைப் பார்ப்பது எவ்வளவு அதிர்ச்சியூட்டும் அவமானம்" என்று காசிலிங்கம் கூறினார்.

இந்தப் போராட்டம் தமிழ் கலாச்சாரத்திற்கு எதிரானது என்றும், யாழ்ப்பாணத்தில் உள்ள மிகவும் புனிதமான இடத்திற்கு முன்னால் தங்கள் நம்பிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் இந்தக் கலாச்சாரத்தை அவர்கள் கேலி செய்வதைப் பார்ப்பது அதிர்ச்சியளிப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும், இந்தக் குழுக்கள் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டுள்ளன என்றும், தங்கள் மேற்கத்திய நம்பிக்கைகளை நம் குழந்தைகள் மீது திணிக்க விரும்பும் ரகசியக் குழுக்களால் ஊக்குவிக்கப்பட்டு நிதியளிக்கப்படுகின்றன என்றும் காசிலிங்கம் கூறினார்.

இதற்கிடையில், கோவிலுக்கு அருகில் நடந்த மற்றொரு சம்பவத்தை அவர் குறிப்பிட்டார். நல்லூர் கோவில் பகுதியில் இறைச்சி விற்பனை செய்யும் ஒரு உணவகத்திற்கு எதிராக பல ஆர்வலர்களும் தனிநபர்களும் தங்கள் கருத்தை உறுதியாகக் கூறினர். புனித வளாகத்தைப் பொறுத்தவரை, அவர்களின் மெனுவை சைவ உணவுக்கு மாற்றுவதற்காக ஏற்பாக உணவகத்தை மாற்றினர்.

"இருப்பினும், புனித இடங்களில் தங்கள் உரிமைகள் என்று அழைக்கப்படுவதை அமல்படுத்தும் இந்தக் குழுக்களால் தமிழ் கலாசாரம் கேலி செய்யப்படும்போது இந்தக் குழுக்கள் இப்போது அமைதியாக இருக்கின்றன" என்று அவர் கூறினார்.

"இந்த மேற்கத்திய கலாச்சாரம் என்று அழைக்கப்படுபவர்கள் மத மற்றும் புனித தலங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும், மேலும் அவர்கள் தங்களுக்கான உரிமைகளைக் கேட்கும்போது சமூகங்களின் கலாச்சாரங்களை மதிக்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

# "சில கைதிகள் விடுவிப்பு"



"பௌத்த தர்மத்தால் முழு உலகமும் ஒளிரட்டும்" என்ற தொனிப்பொருளின் கீழ், இம்முறை, தேசிய பொசொன் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை தேசத்தை நாகரிக மாற்றத்திற்கு இட்டுச் சென்ற மகிந்த தேரரின் வருகை மற்றும் மிஹிந்தலையை மறந்துவிட்டு, தேசிய பொசொன் நிகழ்வைக் கொண்டாட முடியாது என்று ஜனாதிபதி வலியுறுத்தினார். பௌத்த மதத்துடன் ஏற்பட்ட மாற்றமானது இலங்கை மக்கள் நாகரீகமான தேசமாக மாற உதவியது என்றார்.

எனவே, இவ்வாறான ஆன்மீக விழுமியங்களை கொண்ட நிலத்தைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பது ஓர் அரசின் பொறுப்பாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தப் பொறுப்பைப் பூமியுடன் உணர்வுப்பூர்வமான தொடர்புடைய பிரஜைகளால் மாத்திரமே நிறைவேற்ற முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனுராதபுர நகரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மஹிந்த தேரரின் இலங்கை வருகையுடன் நமது நாடு தேரவாத பௌத்த தத்துவம் மற்றும் பாரம்பரியத்தின் மையமாக மாறியது. சமூக மாற்றத்திற்கும் ஆன்மீக விழிப்புணர்வுக்கும் வழிவகுத்த இந்த அற்புதமான நிகழ்வு, வெறும் மத அர்த்தத்தை தாண்டி, கலாசாரம், சமூகம் மற்றும் அரசியல் உட்பட நமது நாட்டின் அனைத்து அம்சங்களிலும் மிகவும் மேம்பட்ட கட்டமைப்பை உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த சமூகத்தை மீண்டும் இந்த பூமியில் நிலைநிறுத்துவதன் மூலம் நாட்டிற்கு அவசியமான சமூக மற்றும் சுற்றாடல் நெறிமுறை சார்ந்த புதிய மனப்பான்மையுடன் கூடிய நவீன நாகரீக அரசைக் கட்டியெழுப்புவதற்கான கைவிட முடியாத பொறுப்பை நிறைவேற்றுவேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

இலங்கையின் முதல் நகரம், முதல் குளம், முதல் அறுவை சிகிச்சைத் தளம் மற்றும் யோத கால்வாய் போன்ற பாரம்பரியங்களைக் கொண்ட அநுராதபுரத்தை அதன் பண்டைய பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வகையில் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்திய உதவியின் கீழ் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இந்தியப் பிரதமர் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இங்குக் கருத்து தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க,

எந்த தேசமும் நிலைத்து நிற்க வலுவான அடித்தளம் தேவை. புத்தரின் தத்துவத்தின் மூலம் இலங்கை மக்கள் அத்தகைய வலுவான அடித்தளத்தைப் பெற்றுள்ளனர். கல்வியில் பின்னடைந்த சமுதாயத்தில் வலிமையான பிரஜைகளை எதிர்பார்க்க முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தம் இந்நாட்டில் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தியது. விகாரைகளைப் பிரிவெனாக்களாக மாற்றுவதன் மூலம், இந்நாட்டு மக்களுக்கு ஆன்மீகத்தையும் அறிவையும் வழங்கும் சமூக நோக்கத்தை நிறைவேற்றுவதில் பௌத்தம் பெரும் பங்காற்றியது. இது ஒரு நாகரீக சமூக பொறிமுறையின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. அதற்காக 2500 ஆண்டுகால வரலாற்றில் இந்நாட்டில் செயற்பட்ட தேரர்கள் அனைவருக்கும் நாம் நன்றியுடன் இருக்க வேண்டும்.

ஆனால் இப்போது அந்தச் சமூகப் பொறிமுறை வீழ்ச்சியடைந்து விட்டது. சில பொலிஸார் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நிலையில் உள்ளனர். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் சில அதிகாரிகள் சட்டவிரோத கடவுச்சீட்டுகளை வழங்கும் நிலை தோன்றியுள்ளது.

ஒரு நெறிமுறை சார்ந்த தேசமாக, இந்த அரச நிறுவனங்களின் பின்னடைவை மீண்டும் மீட்டெடுக்க நாம் செயற்பட்டு வருகிறோம். இந்த பணியைக் கைவிடாமல் நிறைவேற்ற, சாதாரண குடிமக்களின் ஆதரவும் நமக்கு அவசியம். இந்த வீழ்ச்சியடைந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பௌதிக மற்றும் ஆன்மீக ரீதியாக மேம்பட்ட வாழ்க்கைத் தரத்திற்கு இந்த நாட்டை மாற்றும் பொறுப்பைக் கைவிடாமல் நிறைவேற்ற, சாதாரண மக்களும் ஒன்றுபட வேண்டும் என்றார்.

# உப்புல்தெனியவுக்கு விளக்கமறியல்

அவரை புதன்கிழமை (11) அன்று விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி பொது மன்னிப்பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி மற்ற கைதிகளை விடுவித்தது தொடர்பான விசாரணைகள் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், திங்கட்கிழமை (09) கைது செய்யப்பட்டுள்ளார்.

# 26 கைதிகள் விடுவிப்பு

சில சிறைச்சாலை கண்காணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்த நடவடிக்கைகள் குறித்து CID சிறப்பு விசாரணை நடத்தி வருகிறது.

இதற்கிடையில், ஜனாதிபதி மன்னிப்பைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட அனுராதபுரத்தைச் சேர்ந்த திலகரத்ன என்ற சந்தேக நபரைக் கைது செய்யப் பல விசாரணைக் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

# கடற்படை வீரர்களை களமிறக்கிய ட்ரம்ப்

இந்தக் கலவரத்தை ஒடுக்கும் பணியில் காவல்துறை, தேசிய படையைச் சேர்ந்த வீரர்களுடன் தற்போது 'யுஎஸ் மரைன்ஸ்' என்ற பாதுகாப்புப் படையின் கடற்படை பிரிவினைச் சேர்ந்த 700 வீரர்கள் லொஸ் எஞ்சல்ஸ் வரவழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தெற்கு கரோலினா முகாமில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில் 4-வது நாளாக லொஸ் ஏஞ்சல்ஸ் பற்றி எரிகிறது.

சக்திவாய்ந்த யு.எஸ். மரைன்ஸ்:

யுஎஸ் மரைன்ஸ் என்பது அமெரிக்க கடற்படையின் ஒரு பிரிவாக இருந்தாலும் கூட, நிலத்தில் ஏற்படும் அதிதீவிரமான கலவரங்களைக் கட்டுப்படுத்தவே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருக்கும் வீரர்கள் மிகவும் திறமையானவர்களாக அறியப்படுகின்றனர். மூர்க்கத்தனமான கலவரங்களைக் கையாள்வதில் கைதேர்ந்தவர்கள் என்று அறியப்படுகிறார்கள். லொஸ் ஏஞ்சல்ஸில் 4ஆவது நாளாகக் கலவரம் நடந்து வரும் நிலையில், அந்தக் கலவரத்தை ஒடுக்க ட்ரம்ப் எடுத்த முக்கிய நகர்வாக இது பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய நிருபர் மீது துப்பாக்கிச் சூடு:

லொஸ் ஏஞ்சல்ஸ் கலவரம் பற்றி செய்தி சேகரித்து நேரலையில் வழங்கிக் கொண்டிருந்த ஆஸ்திரேலியாவின் பெண் நிருபர் காலில் அமெரிக்க காவல்துறை ரப்பர் புல்லட் கொண்டு சுட்டதில் அவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்திற்கு ஆஸ்திரேலியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆஸ்திரேலியாவின் வெளியுறவு விவகாரங்கள் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், பத்திரிகையாளர்கள் அவர்களின் பணியைப் பாதுகாப்பாக மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். நைன் நியூஸ் (Nine News) ஊடகவியலாளர் மீதான துப்பாக்கிச் சூட்டை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது என தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் லொஸ் ஏஞ்சல்ஸ் மேயர், கலிபோர்னியா ஆளுநர் ஆகியோர் அரசுக்கு எதிராக செயல்படுவதாக ஜனாதிபதி ட்ரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். இதற்குப் பதிலடி கொடுத்துள்ள கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூஸம், "மாகாண பொலிஸாரே கலவரத்தைக் கட்டுப்படுத்த போதும்.

ஆனால், மாநில நிர்வாகத்தை மதிக்காமல் ட்ரம்ப் மத்திய படைகளை அனுப்பியுள்ளது தவறான செயல்" என கண்டித்துள்ளார்.

# கம்பளை குடும்பம் இந்தியாவில் தஞ்சம்

இலங்கையில் கண்டி மாவட்டம், கம்பளை பகுதியைச் சேர்ந்த முஹம்மது கியாஸ் (வயது 43), அவரது மனைவி பாத்திமா பர்ஹானா-(வயது 34) இவர்களின் குழந்தைகள் முஹம்மது யஹ்யா ( வயது 12), அலிஷா-(வயது 4), அமிரா (வயது 4) ஆகிய 5 பேர்களாவர்.

இவர்கள் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் பகுதியில் திங்கட்கிழமை(09) அதிகாலை வந்து இறங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தகவலறிந்த மெரைன் பொலிஸார் தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் இருந்த 5 பேரையும் மீட்டு மண்டபம் மெரைன் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணைக்குட்படுத்திய போது, இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது அங்குப் பலரிடம் கடன் பெற்றுத் திருப்பி கொடுக்க முடியாததால் வாழ வழியின்றி தமிழகத்துக்கு குடும்பத்தோடு அகதிகளாக வந்ததாக முஹம்மது கியாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் 2022 மார்ச் மாதத்திலிருந்து தமிழகத்துக்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை 319 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணில்–தமுகூ...

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஒத்துழைப்பது பற்றி உரையாடல் இடம் பெற்றதாகக் கூட்டணி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ரணில் விக்ரமசிங்க, ரஷ்யாவுக்கு, புதன்கிழமை (11) செல்ல உள்ளதால் இந்த சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டதாக கூறிய கூட்டணி தரப்பு, உள்ளூராட்சி மன்ற விவகாரம் தவிர்த்த ஏனைய விடயங்கள் உரையாடப் பட்டனவா என்ற கேள்விக்குப் பதிலளிக்க மறுத்து விட்டது.

# AI மூலம் நிர்வாணப்படுத்திய...

குறித்த நான்கு மாணவிகளும் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இரண்டு மாணவர்களையும் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுவர்கள் தடுப்பு மையத்திற்கு அனுப்புமாறு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

சிறுமிகளில் ஒருவரின் தந்தை புகைப்படங்களைப் பார்த்து, அது குறித்து பொலிஸில் முறைப்பாடு அளித்ததை அடுத்து, சந்தேகத்திற்குரிய இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

# ரில்வின் சில்வா சீனாவுக்கு விஜயம்

சீனாவின் ஜெஜியாங் மாகாணத்தின் பிரதான பொதுமக்களின் வேலைவாய்ப்பு மண்டபத்தில் திங்கட்கிழமை (9) அன்று நடைபெற்றுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, மக்கள் விடுதலை முன்னணிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான நட்புறவு குறித்துக் குறிப்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த சீனாவும் ஜெஜியாங் மாகாணமும் எதிர்காலத்தில் வழங்கக்கூடிய பங்களிப்புகள் குறித்து மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தீப்தி வாசலகே, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மபிரிய விஜேசிங்க, ஜெஜியாங் மாகாண துணை ஆளுநர் லு ஷென், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச துறையின் தெற்காசிய பிராந்தியத்தின் பணிப்பாளர் ஜெனரல் பான் சியு பின் மற்றும் ஜெஜியாங் மாகாணத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் குழுவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# மீள அழைக்கும் நிகழ்வு

காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களை மீள அழைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (10) அன்று இடம்பெற்றது.

இதன்போது, பழைய மாணபாட்வர்கள் காத்தான்குடி பிரதான வீதி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்துக்கு முன்னாலிருந்து பாரம்பரிய நிகழ்வுகளுடன் நடை பவனியாகப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாடசாலையைச் சென்றடைந்த பழைய மாணவர்களுக்குப் பாடசாலையின் பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கும் வகையில் காலைக் கூட்டம் நடைபெற்றது.

பாடசாலையின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் சத்தார் தலைமையில் நடைபெற்ற இந்த காலைக் கூட்டம் அல் குர்ஆன் வசனங்கள் ஓதப்பட்டு தேசிய கீதம் பாடசாலை கீதம் என்பன பாடப்பட்டு பழைய மாணவர்களின் உடற்பயிற்சியும் இடம்பெற்றது.

இதையடுத்து காலைக் கூட்டத்துக்கு தலைமை வகித்த முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் சத்தாரின் உரை இடம் பெற்றது.

இதன் பின்னர் பழைய மாணவர்கள் தமது பழைய வகுப்புக்களுக்குச் சென்று தமது முன்னைய ஆசிரியர்களுடன் நினைவுகளை மீட்டுக் கொண்டனர்.

இதையடுத்து, பாடசாலையின் பிரதான மண்டபத்தில் விசேட அமர்வு இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட அமர்வில் மத்திய கல்லூரியின் தற்போதைய நிலவரம் பாடசாலையின் முன்னேற்றம் கல்வி அடைவு மட்டம் தற்போதைய தேவைகள் என்பவற்றை எடுத்துக் கூறியதுடன் பாடசாலையின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட பழைய மாணவர்கள் வகுப்பு ரீதியாக கௌரவிக்கப்பட்டனர்.

இதில், இப் பாடசாலையின் பழைய மாணவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்

எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் காத்தான்குடி நகர சபை தவிசாளர் அஸ்பர் உட்பட முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் துறைசார்ந்த பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

- எம்.எஸ்.எம். நூர்தீன்

காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக

# மன்னாரில் இன்று பேரணி

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்று புதன்கிழமை (11) மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி இடம்பெறவுள்ளது.

இந்த கவனயீர்ப்பு பேரணியில் அனைவரும் கலந்து கொண்டு ஆதரவை வழங்குமாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் செவ்வாய்க்கிழமை (10) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

காற்றாலை மின் உற்பத்தி மக்களுக்கு நன்மையை



ஏற்படுத்தும் செயல் திட்டமாகக் காணப்பட்டாலும்,குறித்த காற்றாலைகள் அமைக்கப்படும் இடம் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மேலும், மன்னார் தீவு மற்றும் பெரு நிலப் பரப்பிலும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை தெரிவித்து வருகின்ற போதும், குறித்த நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

எனவே, மக்களின் வாழ்வியலைப் பாதிக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், மீனவ அமைப்புகள் உள்ளடங்களாக சிவில் அமைப்புக்கள் இணைந்து நாளைய தினம் புதன்கிழமை காலை மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியில் ஆரம்பமாகி, பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியைச் சென்றடையும்.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட வேண்டிய கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கி வைக்கப்படும். எனவே, குறித்த பேரணியில் மன்னார் மாவட்ட மக்கள்,வர்த்தகர்கள் உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது இருப்பை தக்க வைக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# வேன் மோதியதில் 12 பேர் காயம்

■ எஸ்.எம்.எம்.முர்ஷித்

ஓட்டமாவடி, தியாவட்டுவான் பகுதியில் செவ்வாய்க்கிழமை (10) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை பகுதியைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் விமான நிலையம் சென்று திரும்பி வரும் வழியில் மட்டக்களப்பு- கொழும்பு பிரதான வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஓட்டமாவடி தியாவட்டுவான் அறபா வித்தியாலயத்திற்கு முன்னாள் உள்ள மதகில் மோதி தலைகீழாகக் கவிழ்ந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, வேனில் பயணித்த நான்கு பெண்கள் இரண்டு குழந்தைகள் உள்ளடங்களாக பணிரெண்டு பேரும் காயமடைந்துள்ளதுடன் அனைவரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணமாக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிரதான நீர் குழாயில் சேதமேற்பட்டுள்ளதாக அதிகார சபையின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 640 பேருக்கு நிரந்தர நியமனம்




■ நூருல் ஹுதா உமர்

நீண்ட காலமாக டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களாக பணியாற்றிய 640 பேருக்கு சுகாதார அமைச்சு நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளது. அந்த வகையில் சுகாதார சேவை உதவியாளர் (கள டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்) நியமனத்தைப் பெற்றுக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இணைப்பு செய்யப்பட்ட 26 பேரும் தங்களது கடமையை வெள்ளிக்கிழமை (06) அன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

குறித்த ஊழியர்களுக்கான Orientation Programme திங்கட்கிழமை (09) அன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. நிருவாகப் பிரிவினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குறித்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் உட்பட பிராந்திய பிரிவு தலைவர்கள், நிருவாக உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.



# அடிக்கல் நடும் நிகழ்வு

■ பாறுக் ஷிஹான்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிந்தவூரில் 2ஆம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு திங்கட்கிழமை (9) அன்று இடம்பெற்றது .

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் நிந்தவூர் பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவருமான ஏ. ஆதம்பாவா இந்த வீடுகளுக்கான அடி கல்லை நட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர், தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர்களான எம்.எல். சம்சுன், அலி.ஏ.இப்திகார் அஹமட், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஆசிரியர் எஸ்.எம்.ஆரிப், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழுவின் தலைவருமான ஏ.ஆதம்பாவா எம்.பியின் முயற்சியால் இந்த வீடுகள் தலா பத்து இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாடியில் இருந்து விழுந்தவர் மரணம்

பொரளையில் உள்ள மெத்சர செவன அடுக்குமாடி குடியிருப்பின் மேல் மாடியில் இருந்து செவ்வாய்க்கிழமை(10) காலை விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பொரளை சரணபலஹிமி மாவத்தையைச் சேர்ந்த 24 வயதான ஆர்.எம்.உயனஹேவகே என அடையாளம் காணப்பட்டுள்ளார். இறந்தவர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை

# 20இல் திறந்து 4 மூடப்படும்

■ பாறுக் ஷிஹான்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்கு செல்லும், பாதை யாத்ரீகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 20ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) திறக்கப்பட்டு, மீண்டும் ஜூலை மாதம் 04ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மூடப்படும் என, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்தார்.



கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா ஜூன் மாதம் 26 ம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும் எனவும் அவர் கூறினார்.

கதிர்காமத்திற்கு பாதயாத்திரையாக செல்வோர் உகந்தமலை முருகன் ஆலயத்தில் ஓரிரு நாட்கள் தங்கியிருந்து குமண யால காட்டினூடாக பிரவேசித்து கதிர்காமத்தை சென்றடைவது வழக்கமாகும்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை(20) காலை உகந்தமலை முருகன் ஆலயத்தில் நடைபெற இருக்கும் ஆரம்ப வைபவத்தையடுத்து, காட்டுப்பாதை காலை ஆறு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை மாத்திரமே திறந்து இருக்குமெனவும் அக் காலப்பகுதிக்குள் மட்டுமே காட்டுக்குள் செல்ல யாத்திரீகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# கட்டாக்காலி மாடுகளினால் விபத்துகள் அதிகரிப்பு

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் காலை முதல் மாலை வரை பிரதான வீதிகள் உள்ளக வீதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் விபத்துகள் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் கூட சம்மாந்துறை விளினியடி சந்தியில் மாடுகளால் விபத்து ஏற்பட்டு முச்சக்கரவண்டியொன்று சேதமடைந்துள்ளதுடன், சாரதி காயமடைந்துள்ளார்.இது தவிர, மோட்டார் சைக்கிள்கள் இரண்டுடன் கட்டாக்காலி



மாடுகள் மோதியதில் இருவர் செவ்வாய்க்கிழமை (10) அன்று காயமடைந்து அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோசடி எனும் கருப்பு இயந்திரத்தை உடைக்க வேண்டும்

மக்கள் அரசாங்கத்திற்கு வரியாக செலுத்தும் ஒவ்வொரு பைசாவும் உறுதி செய்யப்படும் என்றும் அவர்கள் தவறாகப் பயன்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் பொது வரிப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் சட்டத்தின் அதிகபட்ச அளவிற்குத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (ஜூன் 2) காலை நடைபெற்ற 'தேசிய வரி வாரத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் குறிப்பிட்டார்.

சரியான சமூகப் பார்வை கொண்ட நாடாக முன்னேறுவதில், மோசடி என்ற கருப்பு இயந்திரத்தை உடைக்க வேண்டும் என்றும் அதைத் தடுக்கும் எவரும் வீட்டிற்குச் செல்லலாம் என்றும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் இந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை சமூக-அரசியல் அடிப்படையில் படிக்க விரும்புகிறோம். உண்மையில், ஜனாதிபதியின் இந்த அறிக்கை, அவருக்கும் தே.ம.ச. அரசாங்கத்திற்கும் வாக்களித்த பெரும்பான்மையான மக்களின் சமூக அபிலாஷைகளைப் பிரதிபலிக்கிறது.

தாமதமாக வந்தாலும், ஜனாதிபதியிடமிருந்து இந்த வகையான சமூக-அரசியல் தலையீட்டை மக்கள் எதிர்பார்த்தனர். முதலில், ஒரு குறிப்பிட்ட சமூக ஆளுமையுடன் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து. இப்போது அதன் நடைமுறை யதார்த்தத்தை நோக்கி நகர வேண்டிய நேரம் இது.

ஒரு சமூகமாக எடுக்கப்படும் கொள்கை முடிவுகளைத் தடுக்கும் மற்றும் தலையிடும் மோசடி இயந்திரம் குறித்து சில குறிப்புகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதன்படி, இந்த மோசடி இயந்திரத்தில் ஒரு குறிப்பிட்ட அரசு அதிகாரிகள் குழு, ஒரு குறிப்பிட்ட வணிக சமூகம், ஒரு குறிப்பிட்ட அரசியல் அதிகாரிகள் குழு, சட்டவிரோத ஆயுதம் ஏந்திய பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட ஊடக வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

இந்த மோசடி இயந்திரம் ஒரு சமூகத்தின் மேலோட்டமான அமைதியான அமைப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செயல்படுகிறது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். முந்தைய அரசியல் மேடையில் குறிப்பிடப்பட்ட ஒரு விடயம், தேர்தல் மூலம் அரசாங்க அதிகாரம் பெறப்பட்டாலும், அரச அதிகாரத்தைப் பெறுவது மிகவும் கடினம் என்று கூறியது.

கொள்கை முடிவுகளை செயல்படுத்த அரசாங்க அதிகாரம் மற்றும் அரச அதிகாரத்தின் தேவையை மேற்கண்ட கூற்றுகள் தெளிவுபடுத்துகின்றன. எளிமையாகச் சொன்னால், இவ்வளவு காலமாக நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த இந்த மோசடி இயந்திரம் அரசியல் பாதுகாப்பைப் பெற்று வருகிறது என்பது தெளிவாகிறது.

இப்போது அந்த மோசடி என்ற கருப்பு இயந்திரத்தை அம்பலப்படுத்த வேண்டிய நேரம் இது, மக்களின் வரிப்பணத்தை ஏமாற்றியவர்கள் இருந்தால், அவர்கள் சட்டத்தின் மூலம் கையாளப்பட வேண்டும்.

வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு எதிராக சட்டம் அமல்படுத்தப்படாததால், வரி செலுத்துவதில் அவநம்பிக்கையான அணுகுமுறைகள் நாட்டு மக்களிடையே எழுகின்றன. வரிகள் தேசிய வருமானத்தில் மிகப் பெரிய பகுதியைக் குறிக்கின்றன.

வரி என்ற எளிய யோசனை பொது நோக்கங்களுக்காக அரசாங்கத்தின் ஒரு அமைப்பால் விதிக்கப்படும் கட்டாய வரி. வரிவிதிப்பு முறை எளிமையாக இருக்க வேண்டும் என்றும், வரி விதிக்கப் பயன்படுத்தப்படும் முறையின் செலவு குறைவாக இருக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது. எனவே, அரசு இயந்திரத்தால் வசூலிக்கப்படும் பொதுமக்களின் வரிப் பணத்தை அபகரிப்பது ஒரு மரண தண்டனைக்குரிய குற்றமாகும்.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியபடியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விடயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது, அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல. வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கிவிடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

- பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

# கொள்கலன் சர்ச்சையில் பின்னணி என்ன?



எம்.எஸ்.எம்.ஐயூப்

சர்ச்சைகளையே தூங்கிக்கொண்டு இருக்கும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த 5ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, குறிப்பிட்ட ஒரு கருத்து 20 ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டு இருந்தால் அது மிகப் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும்.

ஆனால், கடந்த வாரம் அவர் அக்கருத்தை தெரிவித்த போது அதை எவரும் பெரிதாக கருத்தில் கொள்ளவில்லை.

கடந்த ஜனவரி மாதம் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் சோதனையிடப்படாமல் கொழும்பு துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த கொள்கலன்களைப் பற்றி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்ட அர்ச்சுனா எம்.பி. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுதங்களே அவற்றில் இருந்தன என்று கூறினார்.

கடந்த வருடம் ஜெர்மனிக்கு விஜயம் செய்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க புலம்பெயர்ந்தவர்களைச் சந்தித்ததன் விளைவாகவே அவ்வாயுதங்கள் தாய்லாந்திலிருந்து இந்தக் கொள்கலன்களில் நாட்டுக்குள் வந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே போர் நடைபெற்ற காலத்தில் யாராவது இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்து இருந்தால் அதை எத்தனை பேர் நம்புவார்கள் என்பது ஒரு புறமிருக்கத் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான அத்தனை அரசியல் கட்சிகளும் அதனை ஊதிப் பெருக்கி பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கும். ஆனால், கடந்த 5ஆம் திகதி அர்ச்சுனா இவ்வாறு கூறிய போது சகல எதிர்க்கட்சிகளும் அதை வைத்து அரசியல் இலாபம் தேட முற்படுவது ஒரு புறமிருக்க அனுரகுமாரவின் பரம எதிரியும் அதனை புறக்கணித்தமையே காணக்கூடியதாக இருந்தது.

பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தா, அர்ச்சுனா எம்.பியின் கூற்றை உத்தியோகப்பூர்வமாக மறுத்தாலும் அவரும் அதனைப் பாரதூரமாகக் கருத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரியவிருந்தது. அவர் வெறும் கடமைக்காகவே அந்த மறுப்பறிக்கையை வெளியிட்டார் என்றே தெரிந்தது.

அர்ச்சுனா கிளப்ப முற்பட்ட அந்த சர்ச்சை அவ்வாறு புஸ்வானம் ஆகிவிட்ட போதிலும் விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் பற்றிய சர்ச்சை நாளுக்கு நாள் புதிய திருப்பங்களுடன் தொடர்கிறது. எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்களும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் அளிக்கும் பதில்கள் திருப்திகரமானதாக இல்லை.

அதேவேளை, எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதை நோக்கமாகக் கொண்டே இக்கொள்கலன்களைப் பற்றிய பிரச்சினைகளை எழுப்புகிறார்கள் அல்லாமல், நேர்மையாக உண்மையிலேயே என்ன நடந்தது என்று ஆராய்ந்து அறியும் அக்கறையுடன் கேள்விகளை எழுப்புகிறார்களா? என்ற சந்தேகம் எழுகிறது.

ஏனெனில், ஜனவரி மாதம் இந்த பிரச்சினை முதன் முதலில் எழுப்பப்பட்ட போது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி போன்ற எதிர் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்ட மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப்புக்கு சொந்தமாகக் கொள்கலன்களே இவ்வாறு பரீட்சிக்கப்படாமல் வெளியேற்றப்பட்டுள்ளன என்று கூறினார்.

ஆளுநர் அதனை மறுத்த போதிலும், எதிர்க்கட்சியினர் அவரை விட்டுவிடவில்லை. இறுதியில் அவர் தமது பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இரகசிய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்தே எதிர்க்கட்சியினர் அவரை கைவிட்டனர்.

கடந்த டிசெம்பர் மாதம் கொழும்பு துறைமுகத்தில் ஆயிரக் கணக்கில் கொள்கலன்கள் நிறைந்து அவற்றை விடுவிப்பதில் சுங்க அதிகாரிகள் பெருமளவில் சிரமப்பட்டனர். கப்பல்களில் இருந்து இறக்கப்படும் கொள்கலன்களை விடுவிப்பதற்கு முன்னர் பரீட்சிப்பதற்காகத் துறைமுகத்துக்கு வெளியே இடமில்லாமையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், இப்பிரச்சினையை ஆராய்ந்து தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்காகக் கடந்த டிசெம்பர் மாத இறுதியில் போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இறக்குமதியாளர்களின் கடந்த கால நடத்தை, கொள்கலன்களின் உள்ளடக்கம் பற்றிய ஆவணங்கள் போன்ற பல விடயங்களை அடிப்படையாகக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சில கொள்கலன்களைப் பரீட்சிக்காமல் விடுவிப்பதென அக்குழு தீர்மானித்துள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் பேரிலேயே கடந்த ஜனவரி மாதம் 17 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இந்த 323 கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்தே எதிர்க்கட்சியினர் இக்கொள்கலன்களை ஆளுநர் ஹனீப் யூசுப்பின் எக்ஸ்போ லங்கா நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டவை என்று கூறத் தொடங்கின. சுங்கத் திணைக்களம் அதனை மறுத்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது. என்றதொரு நிபுணர்கள் குழுவொன்று நிறுவப்பட்டு அதன் மேற்பார்வையில் ஆபத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய கொள்கலன்களை சோதனையிடாமல் விடுவிக்கக் கடந்த வருடம் ஜூலை 18ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டதாகவும் அதன்படி, பலமுறை அவ்வாறு கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டது.

அப்போதும், இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களில் 60 சதவீதமானவை திறந்து சோதிக்கப்படுவதில்லை என்றும் அந்நிலையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையிலான குழு இந்த 323 கொள்கலன்களை விடுவிக்கத் தீர்மானித்ததாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், ஆளுநர் ரகசிய பொலிசை நாடும் வரை எதிர்க்கட்சியினர் அவரையே குற்றஞ்சாட்டியது.

எதிர்க்கட்சியினர் அவரை கைவிட்ட போதிலும், விடயத்தைக் கைவிடவில்லை. எனவே கடந்த பெப்ரவரி மாதம் இந்த 323 கொள்கலன்களை விடுவித்தமை தொடர்பாக விசாரணை செய்வதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஏ.கே. செனவிரத்ன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அத்தோடு, சில தனி நபர்கள் செய்த முறைப்பாடுகளை அடுத்து இரகசிய பொலிஸாரும் இந்த 323 கொள்கலன்களைப் பற்றி விசாரணை ஒன்றை ஆரம்பித்தது. இந்த விடயத்தில் பல கேள்விகள் எழுகின்றன. 60 சதவீத கொள்கலன்கள் சோதனையிடப்படாமல் விடுவிக்கப்படுவது என்றால், அத்தோடு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இருந்து அதாவது கடந்த வருடம் ஜூலை மாதம் 18ஆம் திகதி முதல் Screening unit பலமுறை சோதனையிடாமல் கொள்கலன்களை விடுவிக்க முடிவு செய்திருந்தால் டிசெம்பர் மாதம் துறைமுகத்தில் கொள்கலன் நெரிசல் ஏற்பட்டது எவ்வாறு என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். அது அரசாங்கத்தை அசௌகரியத்துக்குள்ளாக்க அதிகாரிகள் மேற்கொண்ட சதியா?

சோதனையிடாமல் கொள்கலன்களை விடுவிக்கும் நடைமுறை ஒன்று இருந்திருந்தால் அதனை இதற்கு முன்னர் எந்தவோர் அரசியல்வாதியும் விமர்சிக்காதது ஏன்?

அதேபோல், அவ்வாறு 60 சதவீதம் கொள்கலன்கள் சோனையிடாமல் விடுவிக்கப்பட்டு இருந்தால் Screening unit புதிதாக என்ன செய்தது? 60 சதவீத கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்டது என்றால் அத்தோடு Screening unit மூலமும் அம்முறை பரிந்துரைக்கப்பட்டு வந்திருந்தால் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையிலான குழு என்ன செய்தது? அக்குழு ஏன் இந்த 323 கொள்கலன்களை மட்டும் விடுவிக்கப் பரிந்துரைத்தது? அக்குழு பரிந்துரைக்கும் வரை Screening unit தாமாக நடவடிக்கை எடுக்காமல் காத்திருந்தார்? அதேவேளை, அவ்வாறானதொரு நடைமுறை ஏற்கனவே இருந்திருந்தால் இந்த 323 கொள்கலன்களின் விடுவிப்பு மட்டும் எவ்வாறு சர்ச்சைக்குரியதாக்கியது?

60 சதவீதம் கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்படுவதாகவும் Screening unit மூலமாகவும் அவ்வாறு செய்ய பரிந்துரைக்கப்படுவதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவிக்கும் கருத்தை எதிர்க்கட்சிகள் ஒரு போதும் நிராகரிக்கவில்லை. அவ்வாறாயின் அவர்கள் எந்த அடிப்படையில் இந்த 323 கொள்கலன்களைப் பற்றி மட்டும் கேள்வி எழுப்புகிறார்கள்?

எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கிறார்கள் என்று வைத்து கொண்டாலும், அதை விசாரிக்க அரசாங்கம் திறைசேரியின் பிரதிச் செயலாளர் தலைமையில் ஏன் குழுவொன்றை நியமித்தது?

அந்தக் குழு நியமிக்கப்பட்டு 4 மாதங்கள் சென்றடைந்து விட்டன. 4 மாதங்களாகியும் அக்குழுவுக்கு ஏன் தமது அறிக்கையை இன்னமும் சமர்ப்பிக்க முடியாமல் போயுள்ளது? இரகசிய பொலிஸாரின் விசாரணைக்கு என்ன நடந்தது?

சர்ச்சைக்குரிய கொள்கலன்களில் இருந்த பொருட்களின் விவரங்களைத் தெரிவிக்குமாறு கோரி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டது. அப்பொருட்கள் வர்த்தகர்களின் பொருட்கள் என்பதால் அவற்றை வெளியிட்டால் வர்த்தக போட்டியில் அவ்வர்த்தகர்களுக்கு அநீதி இழைக்கப்படும் என்ற அடிப்படையில் சுங்கத் திணைக்களம் அதை நிராகரித்துள்ளது. அதை எந்தவொரு எதிர்க்கட்சியும் நிராகரிக்கவில்லை.

கொள்கலன்கள் Screening unit லில் இருந்த பொருட்களின் விவரத்தை அம்பலப்படுத்துகிறேன் என்று கூறி பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில கடந்த 9ஆம் திகதி ஒரு பட்டியலை வெளியிட்டார். அதன் பிரகாரம் சட்ட விரோத பொருட்கள் எதுவும் அவற்றில் இருக்கவில்லை. இவை தான் உண்மையிலேயே அவற்றில் இருந்ததா என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்டபோது, அவர் தெரியாது என்றார். அவ்வாறாயின் ஏதோ பெரிய இரகசியத்தை அம்பலப்படுத்துவதைப் போல, சுங்கத் திணைக்களத்திடம் இருந்து பெற்ற ஆவணம் ஒன்றை ஏன் வெளியிட வேண்டும். எல்லாம் அரசியல் பிரசாரம் போல் தான் தெரிகிறது.

## கடிதங்கள்

### மின்கம்பம் கூரை மீது விழும் அபாயம்

நோர்வூட் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொகவந்தலாவ, சிங்காரத்தைத் தோட்டத்தில் மின்கம்பமொன்று, தோட்ட குடியிருப்பின் கூரை மீது விழும் அபாய நிலையில் உள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் கிராம உத்தியோகத்தர் மற்றும் மின்சார சபைக்கு அறிவித்துள்ள போதிலும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பெரும் ஆபத்து ஏற்படுவதற்கு முன்பு இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எம்.கிருஸ்ணா






பாலர் பாடசாலை

# மூலைகளும் சமூக மயமாக்கலும்



நனுஷிகா,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
கல்வியியல் துறை,
இறுதியாண்டு மாணவி.

உலகிலுள்ள ஒவ்வொரு தாய் தந்தையரும் தங்களுடைய பிள்ளைகள், வாழும் சமூகத்தில் மிக உயர்ந்தவர்களாக வரவேண்டும் என்று நினைப்பதுண்டு. அதேபோல, தம்மால் அடைய முடியாத வெற்றிகளை தம்முடைய குழந்தைகள் மூலமாக அடைய நினைப்பதும் வழக்கமாக உள்ளது. இதற்கான வாய்ப்பினை வழங்கும் முதல் களமாகப் பாலர் பாடசாலைகள் காணப்படுகின்றன.

ஆரம்பப் பிள்ளைப் பருவப் பாடசாலையானது நியம வரன்முறையான பாடசாலை அல்ல. அது இயற்கைக்கூடம், அழகியல் மாடம், சிறுவர் விளையாட்டுத்திடல், மகிழ்ச்சியோடு ஒடி விளையாட வாருங்கள் எனப்பிள்ளைகளை அழைப்பது போல அவை இருத்தல் வேண்டும்.

இப் பாடசாலைகள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் செயற்பாட்டுடன் கூடிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதுடன், நற்பண்பு, நல்லொழுக்கம் போன்ற நடத்தைக் கோலத்தைக் கட்டியெழுப்புதல், உடல் விருத்திக்கு வேண்டிய சந்தர்ப்பத்தினை வழங்கல், அறிவு ஆற்றலை விருத்தி செய்தல், தன்னம்பிக்கையை ஏற்படுத்தல், நற்சுகாதார பழக்கங்களை ஏற்படுத்தல், தினசரிக் கடமைகளை ஒழுங்காகச் செய்யும் திறனை விருத்தி செய்தல், பிள்ளையைச் சூழலுக்கு ஏற்ப இயைபுபடுத்துவதற்கு உதவுல் எனும் சமூக மயமாக்கல் செயற்பாடுகளில் பாரிய பங்காற்றுகின்றன.இதன்படி குழந்தைகள் தனிநபராக மட்டும் இல்லாமல், சமூகத்தில் ஓர் அங்கமாக தங்களை உணர்வதையும், சமூகத்துடன் இணைந்து செயல்படக் கற்றுக் கொள்வதையும் சமூக மயமாக்கல் என்பர்.

பாலர் கல்விக்கான பாடசாலைகளில், குழந்தைகள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்ட இடங்களை 'மூலைகள்' என்கிறோம்.

உதாரணமாக, விளையாட்டு மூலை - கட்டடம், பொம்மைகள், வண்டிகள்.

வாசிப்பு மூலை-சிறுவர் புத்தகங்கள், படங்களுடன் கூடிய கதைகள்.

கலை மூலை-வரைவதற்கான பொருட்கள், வண்ணங்கள், மடிப்பு வேலை

விழிப்புணர்வு மூலை-சமூக விழிப்புணர்வு விளக்கங்கள் (சுத்தம், நட்பு, பாதுகாப்பு) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த மூலைகள் குழந்தைகளுக்கு நினைவாற்றல், மற்றவர்களை மதித்தல், பகிர்வு, ஒத்துழைப்பு போன்ற சமூகநலன்களை வளர்க்கின்றன.

உதாரணமாக, பிள்ளைகள் குழுவாக விளையாடும்போது, சமூகத் தொடர்புகள் வளர்கின்றன. ஆசிரியர் வழிகாட்டுதலுடன், குழந்தைகள் சமூக ஒழுங்கு, எதிர்பார்ப்பு, ஒழுக்கம் போன்றவற்றை உணரக்கூடிய சூழல் அமைகிறது. பாலர் பாடசாலை மூலைகள், குழந்தைகளின் சமூக மயமாக்கலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அறிவு வளர்ச்சியுடன் சமூக உறவுகளும் வலுப்பெறும்.

பாலர் பாடசாலைகளில் உள்ள விளையாட்டு மூலைகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இம்மூலைகள் குழந்தைகளின் உடல், அறிவு, சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

விளையாட்டு மூலைகள் குழந்தைகளுக்கு உடல் இயக்கங்களை மேம்படுத்தும் வாய்ப்புகளை வழங்குகின்றன. குழந்தைகள் தாவுதல், ஓடுதல், ஏறுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் இயக்கத் திறன்கள் மேம்படுகின்றன. இத்தகைய செயல்கள் அவர்களின் உடல் சுறுசுறுப்பை அதிகரிக்கின்றன.

விளையாட்டு மூலைகள் குழந்தைகளுக்குப் பிரச்சினை தீர்க்கும் திறன்களை வளர்க்கும் சூழலை வழங்குகின்றன. கட்டடம் கட்டுதல், புதிர்கள் போடுதல் போன்ற செயல்கள் குழந்தைகளின் சிந்தனைத் திறனை ஊக்குவிக்கின்றன. இத்தகைய செயல்கள் அவர்களின் அறிவியல் மற்றும் தர்க்க சிந்தனையை மேம்படுத்துகின்றன.

விளையாட்டு மூலைகள் குழந்தைகளுக்கு சமூக உறவுகளை வளர்க்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன. குழந்தைகள் குழுவாக விளையாடுவதன் மூலம் பகிர்வு, ஒத்துழைப்பு, மற்றும் மற்றவர்களை மதிக்கும் பண்புகளைக் கற்றுக்கொள்கின்றனர். இத்தகைய செயல்கள் அவர்களின் உணர்ச்சி கட்டுப்பாட்டை மேம்படுத்துகின்றன.

அத்துடன் குழந்தைகளுக்கு மொழி மற்றும் தொடர்பு திறன்களை மேம்படுத்தும் சூழலை வழங்குகின்றன. குழந்தைகள் கதைகள் படிப்பது, கதாபாத்திரங்களை நடிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் சொற்பொழிவு மற்றும் கேட்கும் திறன்கள் மேம்படுகின்றன.

விளையாட்டு மூலைகள் குழந்தைகளுக்கு சுய கட்டுப்பாட்டை வளர்க்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன. குழந்தைகள் தனியாக விளையாடுவதன் மூலம் தங்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள மற்றும் கட்டுப்படுத்த கற்றுக்கொள்கின்றனர். இத்தகைய செயல்கள் அவர்களின் மன நலனை மேம்படுத்துகின்றன. மேலும் படைப்பாற்றல் மற்றும் கற்பனைத் திறன் வளர்ச்சிக்கும் விளையாட்டு மூலைகள் குழந்தைகளுக்கு உதவுகின்றன.

குழந்தைகள் கலைப் பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி புதிய கதைகள் உருவாக்குவதன் மூலம் அவர்களின் கற்பனைத் திறன் மேம்படுகின்றது. விளையாட்டு மூலைகள் குழந்தைகளுக்கு பல்வேறு திறன்களை ஒருங்கிணைக்கும் சூழலை வழங்குகின்றன. குழந்தைகள் கலை, இசை, அறிவியல் போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் முழுமையான வளர்ச்சி உறுதி செய்யப்படுகின்றது.

பாலர் பாடசாலைகளில் வாசிப்பு மூலைகள் குழந்தைகளின் மொழி, அறிவியல், சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இம்மூலைகள் குழந்தைகளுக்குப் புத்தகங்களை அணுகக்கூடிய, சுயமாகக் கற்றுக்கொள்ளும், மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் சூழலை வழங்குகின்றன.

வாசிப்பு மூலைகள் குழந்தைகளின் சொற்கள், இலக்கணம் மற்றும் புரிதல் திறன்களை மேம்படுத்துகின்றன. குழந்தைகள் சுயமாகப் புத்தகங்களைத் தேர்வு செய்து படிப்பதன் மூலம், அவர்கள் சொற்களையும், வாசிப்புத் திறன்களையும் விரிவுபடுத்துகின்றனர். இத்தகைய அனுபவங்கள் அவர்களின் எழுத்தறிவை மேம்படுத்துகின்றன. சுயமாகக் கற்றுக்கொள்ளும் சூழலை வழங்குவதுடன், குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த புத்தகங்களைத் தேர்வு செய்து படிப்பதன் மூலம், அவர்கள் தன்னம்பிக்கையையும், சுய பொறுப்பையும் வளர்த்துக்கொள்கின்றனர். வாசிப்பு மூலைகள் குழந்தைகளுக்கு சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. குழந்தைகள் கதைகள் மூலம் பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் திறனை வளர்த்துக்கொள்கின்றனர். இத்தகைய அனுபவங்கள் அவர்களின் சமூக திறன்களை மேம்படுத்துகின்றன.

மேலும் கதைகள் மற்றும் கதாபாத்திரங்கள் மூலம், குழந்தைகள் புதிய உலகங்களைக் கற்பனை செய்து, படைப்பாற்றலை வளர்த்துக்கொள்கின்றனர். வாசிப்பு மூலைகள் குழந்தைகளுக்கு அமைதியான சூழலை வழங்குகின்றன, இது அவர்களின் மனநலத்தையும் கவனத்தையும் மேம்படுத்துகின்றது. இத்தகைய சூழல் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை குறைக்க உதவுகின்றது.

குழந்தைகளுக்குத் தேவையான அடிப்படை திறன்களைப் பாலர் பாடசாலைகள் வழங்குகின்றன. புத்தகங்களைப் பிடித்தல், பக்கங்களைத் திருப்புதல் போன்ற செயல்கள், குழந்தைகளின் எழுத்தறிவை மேம்படுத்துகின்றன.

பாலர் பாடசாலைகளில் கலை மூலைகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இம்மூலைகள் குழந்தைகளின் கற்பனை, நுண்ணறிவு, சமூக மற்றும் உணர்ச்சி திறன்களை மேம்படுத்துகின்றன. குழந்தைகள் வண்ணத் தூரிகைகள், கத்தரிகள், களிமண் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் கை மற்றும் விரல் யுக்கங்களை மேம்படுத்துகின்றனர்.

இது எழுத்து மற்றும் தினசரி செயல்களின் சமூக மயமாதலுக்கு உதவுகிறது. கலைச் செயல்கள் குழந்தைகளின் கற்பனையை ஊக்குவிக்கின்றன. புதுமையான யோசனைகள் மற்றும் தீர்வுகளை உருவாக்கும் திறனை வளர்க்கின்றன. அத்துடன் குழந்தைகள் நிறங்கள், வடிவங்கள், வடிவமைப்புகளைப் பற்றிக் கற்றுக் கொள்கின்றனர். இது அவர்களின் அறிவியல் மற்றும் பிரச்சனை தீர்க்கும் திறன்களை மேம்படுத்துகிறது. குழந்தைகள் தங்களின் படைப்புகளைப் பற்றி பேசுவதன் மூலம் புதிய சொற்கள் மற்றும் கருத்துகளைக் கற்றுக்கொள்கின்றனர்.

இது அவர்களின் மொழி மற்றும் தொடர்பு திறன்களை மேம்படுத்துவதுடன், குழந்தைகள், தன்னைத் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு பாதுகாப்பான வழியாகவும், அவர்களின் உணர்ச்சி கட்டுப்பாட்டை மேம்படுத்தும் மூலமாகவும் இது விளங்குகிறது.

குழந்தைகள் குழுவாகக் கலைச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் பகிர்வு, ஒத்துழைப்பு மற்றும் தொடர்பு போன்ற சமூக திறன்களைக் கற்றுக்கொள்கின்றனர். தங்களின் படைப்புகளை முடிப்பதன் மூலம் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை மற்றும் சுய மதிப்பு உருவாகிறது. இதனால், பாலர் பாடசாலைகளில் கலை மூலைகளை ஒருங்கிணைப்பது குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உதவுகிறது.

பாலர் பாடசாலைகளில் விழிப்புணர்வு மூலைகள் குழந்தைகளின் சமூக, உணர்ச்சி மற்றும் அறிவியல் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இம்மூலைகள் குழந்தைகளுக்கு தங்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும், கட்டுப்படுத்தவும், மற்றும் சமூக உறவுகளை மேம்படுத்தவும் உதவுகின்றன.

இம்மூலைகள் குழந்தைகளுக்கு அமைதியான சூழலை வழங்குகின்றன, இது அவர்களின் மனநலத்தையும் கவனத்தையும் மேம்படுத்துகின்றது.

இத்தகைய சூழல் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை குறைக்க உதவுகின்றது. விழிப்புணர்வு மூலைகள் குழந்தைகளுக்கு சுயமாகக் கற்றுக்கொள்ளும் சூழலை வழங்குகின்றன. குழந்தைகள் தங்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் மூலம், தன்னம்பிக்கையையும், சுய பொறுப்பையும் வளர்த்துக்கொள்கின்றனர். விழிப்புணர்வு மூலைகள் வகுப்பறையில் அமைதியான சூழலை உருவாக்குகின்றன. ,து மாணவர்களுக்கு மனநலத்தையும், கவனத்தையும் மேம்படுத்துகின்றது.

பாலர் பாடசாலைகளில் உள்ள விளையாட்டு மூலைகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இம்மூலைகள் குழந்தைகளின் உடல், அறிவு, சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. ஆகையால், இம்மூலைகளைச் சிறப்பாக வடிவமைத்து, குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பயன்படுத்துவது அவசியமாகிறது. பாலர் பாடசாலைகளில் வாசிப்பு மூலைகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இம்மூலைகள் குழந்தைகளின் மொழி, அறிவியல், சமூக மற்றும் உணர்ச்சி திறன்களை மேம்படுத்துகின்றன. ஆகையால், வாசிப்பு மூலைகளைச் சிறப்பாக வடிவமைத்து, குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பயன்படுத்துவது அவசியமாவதுடன், விழிப்புணர்வு மூலைகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. மூலைகள் குழந்தைகளின் உணர்ச்சி, சமூக மற்றும் அறிவியல் திறன்களை மேம்படுத்துகின்றன. ஆகையால், விழிப்புணர்வு மூலைகளைச் சிறப்பாக வடிவமைத்து, குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பயன்படுத்துவது அவசியமாகிறது.



## பொசன் பௌர்ணமி தினம்

பொசன் தினத்தையொட்டி, நாடு முழுவதும் உள்ள பௌத்த மக்கள் விகாரைகளுக்கு சென்று பிரார்த்தனை செய்வதைப் படத்தில் காணலாம்...



## திருக்குளிர்த்தி..

கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கு செவ்வாய்க்கிழமை (10) அன்று அதிகாலை நடைபெற்றது.

- வி.ரி.சகாதேவராஜா

நியூயோர்க்

### கிரேட்டா தன்பர்க்

# “கோப மேலாண்மை வகுப்புக்குச் செல்ல வேண்டும்”

## ட்ரம்ப் அறிவுரை



இஸ்ரேல் இராணுவத்தால் கடத்தப்பட்டதாக கிரேட்டா தன்பர்க் குற்றஞ்சாட்டிய நிலையில், ‘தன்பர்க் கோப மேலாண்மை வகுப்புகளுக்கு செல்ல வேண்டும்’ என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவுரை வழங்கியுள்ளார்.

காசாவை நோக்கி நிவாரண கப்பலில் சென்ற தனது குழுவினருடன் கடத்தப்பட்டதாக சமூக செயற்பாட்டாளர் கிரேட்டா தன்பெர்க் சமூக ஊடகங்களில் ஒரு வீடியோவை திங்கட்கிழமை (09) அன்று வெளியிட்டார்.
இதனை இஸ்ரேல் மறுத்தது.

திங்கள்கிழமை (09) அதிகாலை காசாவை நோக்கிச் சென்றபோது, மேட்லீன் நிவாரணக் கப்பலை இஸ்ரேலியப் படைகள் இடைமறித்தன. அது தொடர்பாக வீடியோ ஒன்றில் பேசிய கிரேட்டா தன்பர்க், “இந்த வீடியோவை நீங்கள் பார்த்தால், நாங்கள் சர்வதேச நீரில் தடுத்து நிறுத்தப்பட்டு கடத்தப்பட்டுள்ளோம். என்னையும் மற்றவர்களையும் விரைவில் விடுவிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

இருப்பினும், சில மணிநேரங்களுக்குப் பிறகு, இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் கிரேட்டா தன்பர்க்கின் புகைப்படத்தைப் பகிர்ந்து, “கிரேட்டா தன்பர்க் தற்போது இஸ்ரேல் வழியாகப் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருக்கிறார்” என்று கூறியது. மேட்லீன் கப்பலில் குழந்தைகளுக்கான பால்பவுடர், மாவு, அரிசி, டயப்பர்கள், பெண்கள் சுகாதாரப் பொருட்கள் மற்றும் பல வகையான பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

இந்த நிலையில், தன்பெர்க் கடத்தப்பட்டதாகக் கூறப்படுவது குறித்த செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த ட்ரம்ப், “அவர் ஒரு விசித்திரமான நபர். அவர் ஒரு இளம், கோபக்காரர். அது உண்மையான கோபமா என்று எனக்குத் தெரியவில்லை; நம்புவது கடினம். அவர் நிச்சயமாக வித்தியாசமானவர். அவர் கோப மேலாண்மை வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதுதான் அவருக்கு எனது முதன்மை பரிந்துரை. கிரேட்டா தன்பர்க்கை கடத்தாமலேயே இஸ்ரேல் போதுமான சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது என்று நான் நினைக்கிறேன்” என்று கூறினார்.

அமெரிக்கா

### ட்ரம்புக்கு எதிரான போராட்டம்:

## பெண் ஊடகவியாலளர் மீது துப்பாக்கி சூடு

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறும் போராட்டம் குறித்து செய்தி சேகரிப்பதற்காக அவுஸ்திரேலியாவை சேர்ந்த பெண் செய்தியாளர் லாரன் டோமாசி மீது துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலவரம் நடைபெறும் பகுதிக்கு சென்று, அங்குள்ள நிலவரம் குறித்து கமெரா முன்பு குறித்த செய்தியாளர் லாரன் விளக்கிக்கொண்டிருந்தார். அப்போது பொலிஸ் அதிகாரி ஒருவர் ரப்பர் புல்லட் துப்பாக்கியால் லாரனை குறிவைத்து சுட்டார்.

இந்த சம்பவம் வீடியோவில் பதிவாகியுள்ளது.






இத்தாலி

### எண்ணெய் கப்பலில் இருந்து

## 50 அகதிகள் கைது

இத்தாலியில், கைவிடப்பட்ட எண்ணெய் கப்பலில் இருந்த 50 அகதிகள் கைதுசெய்யப்பட்டனர்.

இத்தாலி கடற்பகுதி அருகே கைவிடப்பட்ட எண்ணெய் கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது. இதில் 50க்கும் மேற்பட்டோர் தங்கி இருந்தனர்.

கடலோர பொலிஸார் அங்குச் சென்று விசாரித்தபோது அவர்கள் லிபியாவில் இருந்து சட்ட விரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைய முயன்றதும், படகு பழுதானதால் கைவிடப்பட்ட எண்ணெய் கப்பலில் தஞ்சம் அடைந்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து , அந்தக் கப்பலில் இருந்தவர்களை கைது செய்த கடலோர பொலிஸார், அனைவரையும் அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர்.

மணிப்பூர்

### மணிப்பூரில்

## மீண்டும் பதற்றம்

மணிப்பூரில், தடை உத்தரவை மீறி திங்கட்கிழமை(9) நள்ளிரவிலும் போராட்டம் நீடித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக, இம்பால் கிழக்கு மாவட்டம் யாய்ரிபோக் துலிஹலில் உள்ள உதவி கலெக்டர் அலுவலகத்துக்கு போராட்டக்காரர்கள் தீவைத்துள்ளனர். இதனால் கட்டிடத்தின் ஒருபகுதி சேதம் அடைந்தது. அரசு கோப்புகள் எரிந்து சாம்பலாகின. கலவரக்காரர்களை அடையாளம் காண போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இம்பால் மேற்கு மாவட்டம் குவாகிதெல், சிங்ஜமேய் ஆகிய இடங்களில் பாதுகாப்பு படையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் நடந்துள்ளன.

அதனால், பொலிஸார் கண்ணீர்புகை குண்டுகளை வீசினர். போராட்டக்காரர்களை கலைக்க ரப்பர் தோட்டாக்களால் சுட்டுள்ளனர்.

பல சாலைகளில் மூங்கில் கம்புகளால் போராட்டக்காரர்கள் தடையை ஏற்படுத்தியுள்ளனர்.

இருப்பினும், இம்பால் விமான நிலையம் செல்லும் வீதி உள்ளிட்ட சாலைகளில் தடுப்புகள் அகற்றப்பட்டன. பெண்கள் குழுக்களும் போராட்டத்தில் இணைந்தன. குராய் என்ற இடத்தில் அவர்கள் டார்ச்லைட் ஏந்தி ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

மணிப்பூரில் மாற்று அரசு அமைக்கக்கோரி இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், மணிப்பூரில் மீண்டும் உச்சகட்ட பதற்றம் நிலவுகிறது.



XXXXXXX

### 18 பணியாளர்களை

## பத்திரமாக மீட்ட இந்திய கடற்படை

கொழும்பில் இருந்து மும்பைக்கு வந்து கொண்டிருந்த சிங்கப்பூர் கப்பலில் திடீரென தீ விபத்து ஏற்பட்ட நிலையில், அதில் இருந்த 22 பணியாளர்களில் 18 பேரை இந்தியக் கடற்படை மீட்டுள்ளது.

சிங்கப்பூர் கொடியுடன் கூடிய கொள்கலன் கப்பலான எம்வி வான் ஹை 503, கொழும்பில் இருந்து புறப்பட்டு மும்பைக்குச் சென்று கொண்டிருந்தது. இந்த கப்பல் கேரளாவின் பேப்பூர் கடற்கரையில் இருந்து சுமார் 78 கடல் மைல் தொலைவில் இருந்தபோது திடீரென திங்கட்கிழமை (09) தீ பிடித்துள்ளது.

இது குறித்த தகவல் இந்தியக் கடற்படைக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து, ஐஎன்எஸ் சூரத் கப்பல் சம்பவ இடத்துக்கு விரைந்தது. கப்பலில் இருந்த 22 பணியாளர்களில் 4 பேர் கடலில் காணாமல் போன நிலையில், மீதமுள்ள 18 பேரை மீட்டு, திங்கட்கிழமை (09) இரவு 10.45 மணிக்கு நியூ மங்களூர் துறைமுகத்தை வந்தடைந்தது.



### இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா தென்னாபிரிக்கா?

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியானது லோர்ட்ஸில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

அவுஸ்திரேலிய அணியே வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள அணியாகக் கருதப்படுகின்றபோதும் தென்னாபிரிக்க அணி சவாலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியில் மர்னுஸ் லபுஷைன் மீது அழுத்தம் காணப்பட்டாலும் உஸ்மான் கவாஜாவோடு சாம் கொன்ஸ்டாஸை விடுத்து லபுஷைனே ஆரம்பத் துடுப்பாட்டவீரராகக் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாமிடத்தில் கமரன் கிறீன் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுவதோடு ஸ்கொட் போலண்ட் சிறப்பாகச் செயற்பட்டபோதும் அணித்தலைவர் பற் கமின்ஸ், மிற்செல் ஸ்டார்க்குடன் மூன்றாவது வேகப்பந்து வீச்சாளராக ஜொஷ் ஹேசில்வூட்டே களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவைப் பொறுத்த வரையில் ககிஸோ றபாடா, மார்கோ ஜன்சன், கேஷவ் மஹராஜ்ஜோடு அடுத்த பந்துவீச்சாளராக டேன் பற்றர்சன் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# வேல்ஸை வென்ற பெல்ஜியம்

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடருக்கான ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், தம்நாட்டில் செவ்வாய்க்கிழமை (10) அதிகாலை நடைபெற்ற வேல்ஸுடனான குழு ஜே போட்டியொன்றில் 4-3 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் வென்றது.

பெல்ஜியம் சார்பாக றொமெலு லுக்காக்கு, யூரி டெலிமான்ஸ், ஜெரெமி டோக்கு, கெவின் டி ப்ரூனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வேல்ஸ் சார்பாக ஹரி வில்சன், சொர்பா தோமஸ், பிரென்னன் ஜோன்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



### இந்திய ஏ எதிர் இங்கிலாந்து லயன்ஸ்:

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த இரண்டாவது டெஸ்ட்

இந்திய ஏ, இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கிடையே நொர்தாம்ப்டனில் வெள்ளிக்கிழமை (06) அன்று ஆரம்பித்து திங்கட்கிழமை (09) முடிவுக்கு வந்த இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட்டானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: லயன்ஸ்

ஏ: 348/10 (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 116, துருவ் ஜுரேல் 52, கருண் நாயர் 40, நிதிஷ் குமார் ரெட்டி 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 3/60, ஜோர்ஜ் ஹில் 2/56, ஜொஷ் டொங்க் 2/91, டொம் ஹெய்ன்ஸ் 1/19, பர்ஹான் அஹ்மட் 1/52)

லயன்ஸ்: 327/10 (துடுப்பாட்டம்: எமிலியோ கே 71, டொம் ஹெய்ன்ஸ் 54, ஜோர்டான் கொக்ஸ் 45, ஜொஷ் டொங்க் ஆ.இ 36, பர்ஹான் அஹ்மட் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: கலீல் அஹ்மட் 4/70, அன்ஷுல் கம்போஜ் 2/56, துஷார் தேஷ்பந்தே 2/62, தனுஷ் கொட்டியான் 1/25, நிதிஷ் குமார் ரெட்டி 1/49)

ஏ: 417/7 (துடுப்பாட்டம்: தனுஷ் கொட்டியன் ஆ.இ 90, அபிமன்யூ ஈஸ்வரன் 80, அன்ஷுல் கம்போஜ் ஆ.இ 51, நிதிஷ் குமார் ரெட்டி 42, ஷர்துல் தாக்கூர் 34, துருவ் ஜுரேல் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோர்ஜ் ஹில் 3/64, கிறிஸ் வோக்ஸ் 2/43, எடி ஜக் 2/71)

லயன்ஸ்: 32/3 (பந்துவீச்சு: அன்ஷுல் கம்போஜ் 2/6, துஷார் தேஷ்பந்தே 1/13).



### சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து

# பூரான் திடீர் ஓய்வு

மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் அணித்தலைவரான நிக்கலஸ் பூரான், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தனது 29ஆவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

இதுவரையில் 61 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 39.66 என்ற சராசரியில் 1,983 ஓட்டங்களை பூரான் பெற்றதோடு, 106 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 100 பந்துகளில் 136.39 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 2,275 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 11, ஜூன் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.